நீதித்துறை நடுவர் எண் 2 (விரைவு நீதிமன்றம், நடுவர் நிலை), மதுரை

முன்னிலை: திரு.S.பிரசாத் B.Sc., B.L.,

நீதித்துறை நடுவர் எண்-2, (விரைவு நீதிமன்றம் நடுவர் நிலை) மதுரை.

2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் வியாழட்கிழமை

சுருக்கு விசாரணை வழக்கு எண் 01/2018

S.T.C No.01/2018

M.சித்ரா,

க/பெ.V.ஜெயராம்,

எண்-14/3, தனலட்சுமி நகர்,

S.கொடிக்குளம்,

தெற்கு மெயின் ரோடு,

சர்வேயர் காலனி,

மதுரை 625 007. …. புகார்தாரர்

/எதிர்/

A.ஆரோக்கியம்,

த/பெ.அருளானந்தர்,

எண்.6, அரங்கசாலை,

பசுமலை,

மதுரை-625 004. .... எதிரி

இவ்வழக்கானது 30.11.2017-ம் தேதி கு.வி.மு.ச.பிரிவு 200-ன் கீழ் புகார்தாரரால் மதுரை, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்-6 நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டு, அங்கு சுருக்கு வழக்கு எண் 1252/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு 03.01.2018-ம் தேதி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இங்கு சுருக்கு வழக்கு எண் 01/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 13.02.2020 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர்

திரு.B.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.இராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது எதிரிக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 உடன் இணைந்த பிரிவு 142-ன் கீழ் தண்டனை மற்றும் புகார்தாரருக்கு இழப்பீடு வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.புகாரின் சுருக்கம்

புகார்தாரருக்கு எதிரி குடும்ப நண்பர் ஆவார் என்றும், புகார்தாரருடைய சித்தப்பா மீனாட்சிசுந்தரம் என்பவருடன் எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தவர் என்றும், புகார்தாரருடைய சித்தப்பா மீனாட்சி சுந்தரம் என்பவர் மூலம் அறிமுகமாகி, எதிரியை புகார்தாரருக்கு கடந்த 10 வருடங்களாக தெரியும் என்றும், புகார்தாரருடைய மகளின் பள்ளிக் கட்டணம் செலுத்துவதற்காகவும், மற்றும் குடும்ப தேவைக்காகவும், நகைகளை அடகு வைத்து கடந்த 2017-ம் வருடம் மே மாதத்தில் பணம் வைத்திருந்ததாகவும், அதை அறிந்துகொண்ட எதிரி கடந்த 25.05.2017-ம் தேதி புகார்தாரருடைய வீட்டிற்கு வந்து, அவருடைய குடும்ப தேவைக்காக அவசரமாக ரூ.1லட்சம் வேண்டும் என்றும், மேற்படி தொகையை ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவதாகக் கூறியதாகவும், எதிரியின் வார்த்தைகளை நம்பி அன்றைய தினமே புகார்தாரருடைய வீட்டில் வைத்து ரூ.1லட்சத்தை கடனாகக் கொடுத்ததாகவும், எதிரி உறுதியளித்தவாறு ஒரு வார காலத்திற்குள் கடன் தொகையை திருப்பிச் செலுத்தாமல் இருந்ததாகவும், புகார்தாரர் பலமுறை எதிரியின் வீட்டிற்கு நேரில் சென்று பணத்தை திருப்பிக் கேட்டபோது, எதிரி பணத்தை திருப்பித் தராமல் காலம் கடத்தி வந்ததாகவும், இறுதியாக கடந்த 20.08.2017-ம் தேதியிட்ட மதுரை, கே.கே.நகர் கிளை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின்

காசோலை எண்: “559977”ஐ ரூ.1லட்சத்திற்கு நிரப்பி, கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் 22.08.2017-ம் தேதி புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் மதுரை, மூன்றுமாவடி கிளை, சிண்டிகேட் வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது, “Funds Insufficient” என்ற காரணத்துடன் 29.08.2017-ம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து 29.08.2017-ம் தேதியன்றே எதிரியிடம் தெரிவித்தபோது, மீண்டும் அந்த காசோலையை 11.10.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்துகொள்ளுமாறு எதிரி கூறியதன்பேரில், 11.10.2017-ம் தேதி புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் மதுரை, மூன்றுமாவடி கிளை, சிண்டிகேட் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, “Funds Insufficient” என்ற காரணத்துடன் 16.10.2017-ம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து 27.10.2017-ம் தேதி புகார்தாரர் வழக்கறிஞர் மூலமாக எதிரியின் வீட்டு முகவரிக்கு சட்ட அறிவிப்பை அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு எதிரி பதிலோ, பணமோ கொடுக்காமல் இருந்ததாகவும், எதிரி புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கில் தனது வங்கிக் கணக்கில் “Funds Insufficient” என தெரிந்திருந்தும், வழக்கு காசோலையை வழங்கி புகார்தாரரை ஏமாற்றியுள்ளதால், எதிரி மீது பிரிவு 138 உடன் இணைந்த பிரிவு 142 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டியும் பிரிவு 357 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படியும் தக்க நிவாரணம் வழங்க வேண்டும் என புகாரில் கோரப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனு மற்றும் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204(3)-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு கு.வி.மு.ச.பிரிவு 251-ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் பேரிலான இவ்வழக்கைப் பற்றி எடுத்துரைத்த போது, எதிரி வழக்கை பொய் வழக்கு என மறுத்தார். அதன்பேரில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

4. புகார்தாரர் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. புகார்தாரரான ம.சா.1 தனது சாட்சியத்தில், புகார் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்து, 20.08.2017-ம் தேதியிட்ட "559977" என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-கான மதுரை, கே.கே.நகர் கிளை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆவணமாகவும், 22.08.2017-ம் தேதிய வங்கி செலுத்துச் சீட்டு அசல் ம.சா.ஆ.2 ஆவணமாகவும், 29.08.2017 தேதிய காசோலை திருப்புதல் குறிப்பாணை அசல் ம.சா.ஆ.3 ஆவணமாகவும், 11.10.2017-ம் தேதிய வங்கி செலுத்துச் சீட்டு அசல் ம.சா.ஆ.4 ஆவணமாகவும், 16.10.2017 தேதிய காசோலை திருப்புதல் குறிப்பாணை அசல் ம.சா.ஆ.5 ஆவணமாகவும், 27.10.2017 தேதிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.6 ஆவணமாகவும், 28.10.2017 தேதிய அஞ்சல் ரசீது அசல் ம.சா.ஆ.7 ஆவணமாகவும், அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.8 ஆவணமாக தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார்.

6. புகார்தாரர் தரப்பில் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சீராளன், மதுரை, கே.கே.நகர் கிளை, பாரத வங்கியின் கிளை மேலாளர் தனது சாட்சியத்தில் 01.07.2017 முதல் 31.12.2017 வரையிலான எதிரியினுடைய வங்கிக் கணக்கு விபர பட்டியல் அசல் ம.சா.ஆ.9 ஆவணமாக தாக்கல்

செய்து சாட்சியமளித்துள்ளார்.

7. புகார்தாரர் தரப்பில் ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட ஸ்ரீவித்யா, மதுரை, மூன்றுமாவடி கிளை, சிண்டிகேட் வங்கியில் மேலாளர் தனது சாட்சியத்தில் 01.08.2017 முதல் 31.10.2017 வரையிலான புகார்தாரருடைய வங்கிக் கணக்கு விபர பட்டியல் அசல் ம.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார்.

8. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து, எதிரியிடம் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(b)-ன் கீழ் படித்துக்காட்டி வினவிய போது எதிரி புகார்தாரர் தரப்பு சாட்சிகள் சொல்வது பொய் சாட்சி என்றும், வழக்கும் பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என தெரிவிக்கப்பட்டது.

9. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் எதிரி தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

10. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில், எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றச்சாட்டை புகார்தாரர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதே ஆகும்.

11. புகார்தாரர் தரப்பில், புகார்தாரருக்கு எதிரி குடும்ப நண்பர் ஆவார் என்றும், புகார்தாரருடைய சித்தப்பா மீனாட்சிசுந்தரம் என்பவருடன் எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தவர் என்றும், புகார்தாரருடைய சித்தப்பா மீனாட்சி சுந்தரம் என்பவர் மூலம் அறிமுகமாகி, எதிரியை புகார்தாரருக்கு கடந்த 10 வருடங்களாக

தெரியும் என்றும், புகார்தாரருடைய மகளின் பள்ளிக் கட்டணம் செலுத்துவதற்காகவும், மற்றும் குடும்ப தேவைக்காகவும், நகைகளை அடகு வைத்து கடந்த 2017-ம் வருடம் மே மாதத்தில் பணம் வைத்திருந்ததாகவும், அதை அறிந்துகொண்ட எதிரி கடந்த 25.05.2017-ம் தேதி புகார்தாரருடைய வீட்டிற்கு வந்து, அவருடைய குடும்ப தேவைக்காக அவசரமாக ரூ.1லட்சம் வேண்டும் என்றும், மேற்படி தொகையை ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவதாகக் கூறியதாகவும், எதிரியின் வார்த்தைகளை நம்பி அன்றைய தினமே புகார்தாரருடைய வீட்டில் வைத்து ரூ.1லட்சத்தை கடனாகக் கொடுத்ததாகவும், எதிரி உறுதியளித்தவாறு ஒரு வார காலத்திற்குள் கடன் தொகையை திருப்பிச் செலுத்தாமல் இருந்ததாகவும், புகார்தாரர் பலமுறை எதிரியின் வீட்டிற்கு நேரில் சென்று பணத்தை திருப்பிக் கேட்டபோது, எதிரி பணத்தை திருப்பித் தராமல் காலம் கடத்தி வந்ததாகவும், இறுதியாக கடந்த 20.08.2017-ம் தேதியிட்ட மதுரை, கே.கே.நகர் கிளை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் ம.சா.ஆ.1 காசோலையை ரூ.1லட்சத்திற்கு நிரப்பி, கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் 22.08.2017-ம் தேதி புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் மதுரை, மூன்றுமாவடி கிளை, சிண்டிகேட் வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது, “Funds Insufficient” என்ற ம.சா.ஆ.3 குறிப்பாணையுடன் 29.08.2017-ம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டதாகவும், இதுகுறித்து 29.08.2017-ம் தேதியன்றே எதிரியிடம் தெரிவித்தபோது, மீண்டும் ம.சா.ஆ.1 காசோலையை 11.10.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்துகொள்ளுமாறு எதிரி கூறியதன்பேரில், 11.10.2017-ம் தேதி புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் மதுரை, மூன்றுமாவடி கிளை, சிண்டிகேட் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, “Funds Insufficient” என்ற ம.சா.ஆ.5 குறிப்பாணையுடன் 16.10.2017-ம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டதாகவும், இதுகுறித்து 27.10.2017-ம்

தேதி புகார்தாரர் வழக்கறிஞர் மூலமாக எதிரியின் வீட்டு முகவரிக்கு ம.சா.ஆ.6 சட்ட அறிவிப்பை அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு எதிரி பதிலோ, பணமோ கொடுக்காமல் இருந்து வந்ததாகவும், தனது வங்கிக் கணக்கில் "Funds Insufficient" என தெரிந்திருந்தும், எதிரி புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கில், வழக்கு காசோலையை புகார்தாரருக்கு வழங்கிய வகையில் எதிரி தண்டிக்கப்படக்கூடியவர் என்றும், மேலும் புகார்தாரருக்கு இழப்பீடு வழங்கவேண்டிய கடப்பாடும் எதிரிக்கு உள்ளது என வாதிடப்பட்டது.

12. எதிரி தரப்பில், புகார்தாரரிடம் எதிரி யாதொரு கடனும் வாங்கவில்லை என்றும், வழக்கு காசோலையும் கடனுக்காக வழங்கப்படவில்லை என்றும், புகார்தாரருக்கு அரசு வேலை வாங்கி தருவதாக அருள்செல்வம் சொன்னதன்பேரில், புகார்தாரர் மேற்படி அருள்செல்வத்திடம் ரூ.1லட்சம் பணம் கொடுத்ததாகவும், அப்போது அருள்செல்வத்தை அறிமுகப்படுத்தி வைத்த நபர் என்ற முறையில், கையெழுத்து மட்டும் செய்து, பிணையமாக எதிரியின் காசோலையை புகார்தாரரின் கணவர் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி ரூ.1லட்சத்தை எதிரிக்கு கடன் கொடுத்ததற்கான ஆவணங்கள் ஏதும் புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், மேற்படி ரூ.1லட்சத்தில் ரூ.70ஆயிரம் என்ற தொகையை அருள்செல்வம் புகார்தாரரிடம் செலுத்திவிட்டதாகவும், பாக்கி தொகையை அருள்செல்வம் புகார்தாரருக்கு திருப்பிச் செலுத்தாததால் பிணையமாக பெறப்பட்ட எதிரியின் காசோலையை பயன்படுத்தி, புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என வாதிடப்பட்டது.

13. பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்ட உட்கூறுகளைப் பின்பற்றி புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக

தெரிகின்ற நிலையில், வழக்கு காசோலை புகார்தாரர் வசம் உள்ள நிலையில், வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தை எதிரி மறுக்காத நிலையில், பிரிவுகள் 118, 139 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் கீழ், வழக்கு காசோலை கடன் அல்லது பொறுப்புறுதிக்காக எதிரியால் புகார்தாரருக்கு வழங்கப்பட்ட காசோலை தான் என்ற அனுமானம் இவ்வழக்கில் ஏற்படுகிறது. அதேசமயம் பிரிவுகள் 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனுமானமானது மறுத்தளிக்கக்கூடிய மற்றும் முறியடிக்கக்கூடிய அனுமானமாகும். (Rebuttable Presumption) இதை ஒவ்வொரு வழக்கிலும் சந்தர்ப சூழ்நிலைகளை அனுசரித்து முறியடிக்கலாம் என மாண்புமிகு உச்சநீதிமன்றம் பலதீர்முடிவுகளின் வாயிலாக விசாரணை நீதிமன்றங்களுக்கு வழிகாட்டியுள்ளதை இங்கு கருத்தில் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

14. மாண்புமிகு உச்சநீதிமன்றம் “Bharat Barrel & Drum Manufacturing Company Vs Amin Chand Pyarelal” (1993) 3 SCC (35) என்ற தீர்முடிவில் “It is a well settled proposition of law that once execution of the negotiable instrument is admitted, the presumption under Section 118(a) of N.I. Act would arise that it is supported by a consideration. However, such presumption is rebuttable and the accused can prove the non-existence of a consideration by raising a probable defence. The burden upon the accused of proving the non-existence of the consideration can be either direct or by bringing on record the preponderance of probabilities by reference to the circumstances upon which he relies. To disprove the presumption, the accused has to bring on record such facts and circumstances upon consideration of which the Court may either

believe that the consideration did not exist or its nonexistence was so probable that a prudent man would, under the circumstances of the case, act upon the plea that it did not exist." என்பதாக வழிகாட்டியுள்ளது.

15. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் "Rangappa -vs- Sri Mohan (2011)1 SCC (Cri) 184 (Para 28)" என்ற தீர்முடிவில் "It is a settled position that when an accused has to rebut the presumption under section 139, the standard of proof for doing so is that of preponderance of probabilities. Therefore, if the accused is able to raise a probable defence which create doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can fail. As clarified in the citation, the accused can rely on the materials submitted by the complainant in order to raise such a defence and it is conceivable that in some cases accused may not need to adduce evidence of his/her own" என்பதாகவும், "Basalingappa Vs Mudibasappa" (2019 SCC ONLINE SC 491) (para 23) என்ற தீர்முடிவில் "We having noticed that ratio laid down by this court in above cases on Sections 118(a) and 139 we now summarise the principles enumerated by this court in following manner: - (I) Once the execution of cheque is admitted Section 139 of the Act mandates a presumption that the cheque was for discharge of any debt or other liability. (ii) The presumption under Section 139 is a rebuttable presumption and the onus is on the accused to raise the proable defence. The standard of proof for rebutting the presumption is that of preponderance of probabilities. (iii) To rebut the presumption, it is open for the accused to rely on evidence led by him or accused can also rely

on the materials submitted by the complainant in order to raise a probable defence. Inference of preponderance of probabilities can be drawn not only from the materials brought on record by the parties but also by reference to the circumstances upon which they rely. (iv) That it is not necessary for the accused to come in the witness box in support of his defence, Section 139 imposed an evidentiary burden and not a persuasive burden. என விசாரணை நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

16. மேற்சொன்ன தீர்முடிவுகளின் பேரில், புகார்தாரர் தரப்பில் ஒரு காசோலை கடனிற்கு வழங்கப்பட்டதாக பிரிவு 139 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் அனுமானம் கூறப்பட்டிருந்தாலும், எதிரி தரப்பில் மேற்படி அனுமானத்தை முறியடிக்கும் விதமாக மேற்படி காசோலையானது சட்டப்படி செல்லத்தக்க கடனிற்காக வழங்கப்பட்டதா அல்லது பொறுப்புறுதிக்காக வழங்கப்பட்டதா என்ற சந்தேகத்தை, புகார்தாரரின் சாட்சியங்களின் வாயிலாக ஏற்படுத்தியிருந்தாலே புகார்தாரரின் வழக்கு தோல்வியடையும் என்றும் எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபிக்க கட்டாயமாக தனது சாட்சியங்களை முன்நிறுத்த தேவையில்லை என்று விசாரணை நீதிமன்றங்களுக்கு வழிகாட்டியுள்ளதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த வகையில் புகார்தாரரின் வழக்கை முறியடிக்கும் வகையில் எதிரி தனது தரப்பு வழக்கினை சாத்தியக் கூறுகளின் மேம்பாட்டு நிலையில் (Pre-Ponderance of Probabilities) அடிப்படையில் முன்வைத்துள்ளாரா என்பதை தற்போது பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

17. 25.05.2017-ம் தேதி புகார்தாரரிடமிருந்து எதிரி அவருடைய குடும்ப செலவிற்காக ரூ.1லட்சத்தை கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடன்

தொகைக்காக 20.08.2017-ம் தேதி வழக்கு காசோலையை பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு புகார்தாரருக்கு வழங்கியதாகவும், மேற்படி காசோலையை புகார்தாரர் வசூலுக்காக எதிரி சொன்னதன்பேரில் 22.08.2017 மற்றும் 11.10.2017 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்தபோதும், மேற்படி காசோலை "போதிய பணமில்லை" என்ற காணரத்துடன் திருப்பப்பட்டதாக கண்டு, மேற்படி கடன் தொகையான ரூ.1லட்சத்தை எதிரி செலுத்தக்கோரி புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட எதிரி, வழக்கின் சங்கதிகளை ஆட்சேபித்தோ, வழக்கு காசோலை குறித்தோ யாதொரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை.

18. இச்சூழலில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் "Vijayabaskar -vs- Dhasskand" (2018)3 MLJ(Crl) 465 (Para 9) என்ற வழக்கில் "Moreover, after receiving the statutory notice in this case, the respondent had not issued any reply notice by stating the entire defence taken in the Trial court. It is his duty to deny the entire allegation at the earliest point of time. But in this case nothing was disputed at the earliest point, only during the time of trial the defence raised as above the thereafter, the Trial Court has also misconstrued Section 138 of Negotiable Instruments Act and acquitted the accused, which is nothing but erroneous. So the order of acquittal passed by the trial Judge is set aside and this Court came to conclusion that the respondent is found guilty for the offence under section 138 of the Negotiable Instruments Act. என விசாரணை நீதிமன்றங்களுக்கு வழிகாட்டியுள்ளதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

19. அதேசமயம் ம.சா.1 குறுக்கு விசாரணையின் வாயிலாக, அருள்செல்வம் என்பவரிடம் புகார்தாரர் அரசு வேலைக்காக ரூ.1லட்சம் பணத்தை கொடுத்ததாகவும், மேற்படி அருள்செல்வத்தை புகார்தாரரின் கணவருக்கு எதிரி அறிமுகப்படுத்தியதாகவும், அதன் அடிப்படையில் மேற்டி தொகைக்கு பிணையமாக எதிரியின் கையொப்பமிட்ட காசோலை, புகார்தாரரின் கணவரால் பெறப்பட்டது என்பதாக எதிரி தரப்பு வழக்கு முன்வைக்கப்பட்டது.

20. அதேசமயம் எதிரி தரப்பு வாதத்திற்கு ஆதரவாக மேற்படி அருள்செல்வம் என்பவரை எதிரி சார்பில் விசாரிக்கப்படவில்லை. மேலும் அருள்செல்வம் பெற்ற தொகைக்காக எதிரியின் கையொப்பம் செய்த காசோலையை பிணையமாக எதிரி ஏன் வழங்கவேண்டும் என்பது குறித்தோ, அதற்கான அவசியம் என்ன என்பது குறித்தோ, எதிரி தரப்பில் தெளிவுபடுத்தவில்லை. மேலும் பிணையமாக வழங்கப்பட்டது தான் வழக்கு காசோலை என்பதாக எதிரி தரப்பில் வெறுமனே மறுப்பு மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் எதிரி தரப்பு வழக்கிற்கு உதவக்கூடியதாக இல்லை.

21. இச்சூழலில் நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் K.N.Beena vs Muniyappan and Another, (2001) 8 SCC 458 (para 9) என்ற வழக்கில் “This court held that in view of the provisions of Section 139 of the Negotiable Instruments Act read with Section 118 thereof, the Court had to presume that the cheque had been issued for discharging a debt or liability. The said presumption was rebuttable and could be rebutted by the accused by proving the contrary. But mere denial or rebuttal by the accused was not enough. The accused had to prove by cogent evidence

that there was no debt or liability. This court clearly held that the High Court had erroneously set aside the conviction, by proceeding on the basis that denials/averments in the reply of the accused were sufficient to shift the burden of proof on the complainant to prove that the cheque had been issued for discharge of a debt or a liability. This was an entirely erroneous approach. The accused had to prove in the trial by leading cogent evidence that there was no debt or liability" என்பதாக விசாரணை நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தியுள்ள வகையில், புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள அனுமானத்தை முறியடிக்கும் வகையில், புகார்தாரரின் வழக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சந்தேகத்தை எதிரி தரப்பில் ஏற்படுத்தாத நிலையில், மேலும் எதிரி தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ளதக்க வகையில், "cogent evidence" என்பதான சாட்சியங்கள் ஏதும் எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையில், "mere denial or rebuttal by the accused was not enough" என்ற சூழலில் எதிரி தரப்பு வாதம் அவர் தரப்பு வழக்கிற்கு உதவக்கூடியதாக இல்லை.

22. ஆக, இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் ஏற்பட்டுள்ள அனுமானத்தை முறியடிக்கும் வகையிலோ, அல்லது புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களில் வாயிலாகவோ, மேற்படி அனுமானத்தை மறுத்தளிக்கக்கூடிய வகையிலோ, அல்லது உரிய முறையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலோ, எதிரி தரப்பு வழக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை என்ற நிலையில், இவ்வழக்கில் எதிரி தனது தரப்பு வழக்கினை சாத்தியக் கூறுகளின் மேம்பாட்டு நிலையில் (Pre-Ponderance of Probabilities) அடிப்படையில் இந்நீதிமன்றம் ஏற்கும் வகையில் முன் வைக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதன் அடிப்படையில் வழக்கு

காசோலை சட்டப்படி செல்லக்கூடிய கடனிற்கு வழங்கப்பட்ட காசோலை தான் என்பதை, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் எதிரி குற்றம் செய்திருப்பதாக புகார்தாரர் தரப்பில் தகுந்த சாட்சியத்தின் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23. எனவே, இறுதியாக எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, மேற்படி பிரிவிற்காக எதிரிக்கு 3 மாதம் (மூன்று மாதம்) மெய்க்காவல் சிறை தண்டனை வழங்கியும் ம.சா.ஆ.1 காசோலை தொகையான ரூ.1,00,000/-ஐ கு.வி.மு.ச.பிரிவு 357-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக 2 மாதம் (இரண்டு மாதம்) காலகெடுவிற்குள் புகார்தாரர் வசம் எதிரி வழங்க வேண்டும் என்றும், இழப்பீட்டுத் தொகையை எதிரி செலுத்த தவறினால் கு.வி.மு.ச.பிரிவு 431உ/இ இ.த.ச.பிரிவு 64-ன் கீழ் எதிரிக்கு 1 மாதம் (ஒரு மாதம்) மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) S.பிரசாத்
நீதித்துறை நடுவர் எண்-2,
(விரைவு நீதிமன்றம் நடுவர் நிலை)
மதுரை.

<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1 சித்ரா

ம.சா.2 சீராளன்

ம.சா.3 ஸ்ரீவித்யா

<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>

ம.சா.ஆ.1 20.08.2017-ம் தேதியிட்ட "559977" என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-கான மதுரை, கே.கே.நகர் கிளை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் காசோலை அசல்

ம.சா.ஆ.2 22.08.2017-ம் தேதிய வங்கி செலுத்துச் சீட்டு அசல்

ம.சா.ஆ.3 29.08.2017 தேதிய காசோலை திருப்புதல் குறிப்பாணை அசல்

ம.சா.ஆ.4 11.10.2017-ம் தேதிய வங்கி செலுத்துச் சீட்டு அசல்

ம.சா.ஆ.5 16.10.2017 தேதிய காசோலை திருப்புதல் குறிப்பாணை அசல்

ம.சா.ஆ.6 27.10.2017 தேதிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

ம.சா.ஆ.7 28.10.2017 தேதிய அஞ்சல் ரசீது அசல்

ம.சா.ஆ.8 அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல்

ம.சா.ஆ.9 01.07.2017 முதல் 31.12.2017 வரையிலான எதிரியினுடைய வங்கிக் கணக்கு விபர பட்டியல் அசல்

ம.சா.ஆ.10 01.08.2017 முதல் 31.10.2017 வரையிலான புகார்தாரருடைய வங்கிக் கணக்கு விபர பட்டியல் அசல்

<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>

இல்லை

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>

இல்லை

(ஒம்) S.பிரசாத்

நீதித்துறை நடுவர் எண்-2,

(விரைவு நீதிமன்றம் நடுவர் நிலை)

மதுரை

குறிப்பு:

Cr.M.P.No.1237/2020 மனுவின் மூலமாக குற்றவாளி/குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனை காலம் இன்றிலிருந்து 30 நாட்கள் வரை கு.வி.மு.ச.பிரிவு 389(3)-ன் கீழ் நிறுத்தி வைக்கப்படுகிறது.

உண்மைநகல்

நீதித்துறை நடுவர் எண்-2,
(விரைவு நீதிமன்றம் நடுவர் நிலை)
மதுரை